# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.98/2018 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா–02 (PW–02) |
| **பெயர்** | :– | தேவராஜன் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜூலைதிங்கள் 01 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரிகள் தோன்றினர். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம் மாவட்டம் ஓமலூர் புளியம்பட்டியில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்கு தெரியாது. பழனிசாமி என்பவரையும் தெரியாது. நாரணம்பாளையம் பிரிவு சாலையில் கல் குவாரி உள்ள இடத்தில் கூட்டமாக இருந்தார்கள். என்ன என்று பார்க்க நானும்சென்றேன். அங்கு காவல் நிலையத்தினர் என் பெயர் விலாசத்தை கேட்டு எழுதி வாங்கினார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

நாரணம்பாளையம் பிரிவு சாலையில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் சின்னதம்பி மகன் பழனிசாமி உரிமம் வாங்காமல் வெடி வைத்து கல் உடைத்து விற்றார் என்றால் அது எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக விசாரிக்க அரசு அலுவலர்களும் காவல் துறையினரும் அந்த இடத்திற்கு வந்தனர் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த இடத்தில் துளை போடும் இயந்திரம் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. அங்கு 2 கிலோ வெடிமருந்தும் 16 வெடி தோட்டாக்களும் இருந்தன என்றால் அது எனக்கு தெரியாது. அரசு அதிகாரிகள் மேற்சொன்ன மூன்றையும் பரிமுதல் செய்து எடுத்துசென்றார்கள் என்றால் நான் எதையும் பார்க்கவில்லை. நான் புலனாய்வின்போது அரசு தரப்பு வழக்கை வலியுறுத்தி கூறிவிட்டு எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

நான் சென்ற இடத்திற்கு அருகில் LSP எண்ணெய் தொழிற்சாலை உள்ளது என்றால் சரிதான். அது இயங்கி கொண்டுதான் உள்ளது. பணியாளர்கள்

எப்போதும் இருப்பார்கள் என்றால் சரிதான். அதை ஒட்டி **East India mining company** உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திற்கு வடக்கில் குப்பங்காடு ஊருக்கு செல்லும் தடம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் முனியப்பன் கோவில், பனைமரங்கள் உள்ளன என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.